# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032.
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

**முறையீட்டு மனு எண்: 414 / 2016**

**ஆணை எண்: 273 / 2017**

**நாள்: 11.12.2017**

திருமதி. மூ. சுகுணா,
க/பெ. மூர்த்தி,
5, எட்டியத்தம்மன் கோயில் தெரு,
குண்டுமேடு, திருமழிசை,
சென்னை – 600 124. – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருமழிசை பேரூராட்சி, – எதிர் மனுதாரர்

<u>ஆணை</u>

முறையீட்டு மனுதாரர் திருமதி. மூ. சுகுணா என்பவரது 19.07.2014 தேதியிட்ட பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு முகவரியிட்ட முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநரது கடிதம் ந.க.எண். 12280/2014/இ2 நாள்: 02.05.2016 உடன் இணைத்து 12.05.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. இம்முறையீட்டு மனு எண். 0414/2016 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி மனுவில், திருமழிசை பேரூராட்சியில் சர்வே எண்.41/1, 41/2 ஆகிய தங்களது இடத்தில் தங்களது 12.5 சென்ட் வீடும், மனையும் அமைந்துள்ளதாகவும் அதற்கு தெற்கு பக்கத்தில் மேற்கிலிருந்து கிழக்காக 8 அடி அகல பாதை உள்ளதாகவும் தெரிவித்துள்ளீர்கள். மார்ச் 2014ல் திருமழிசை பேரூராட்சியின் முன்னாள் தலைவர், செயல் அலுவலர், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சிலரும் வந்து மனுதாராது நிலத்தின் தெற்கு பகுதியில் 57 அடி நீளம் மற்றும் 12 அடி அகலமுள்ள நிலத்தை எந்தவித முன் அறிவிப்பும் கொடுக்காமல் கழிவுநீர் கால்வாய் மற்றும் 8 அடி பாதையில் தார்சாலை அமைக்கப் போவதாகத் தெரிவித்து மனுதாராது காம்பவுண்டு சுவரை இடித்து சேதப்படுத்தியாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பூவிருந்தவல்லி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மனுதாரரும் அவரது கணவரும் வழக்கு தொடர்ந்து மேற்படி பணிகளுக்கு இடைக்கால தடை உத்தரவு பெற்றதாகவும் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்ற தடையினையும் மீறி, காவல்துறை துணையுடன், மனுதாரரது இடத்தினை ஆக்கிரமித்து கால்வாய் மற்றும் தார்சாலை அமைத்து விட்டனர் எனத் தெரிவித்தும் தங்களுக்கு அவ்விடத்தை மீட்டுத் தருமாறும் அல்லது இழப்பீடு தொகை பெற்றுத் தருமாறும் மனுதாரரால் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவம் 18.05.2016 அறிவிப்பாணை மூலம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (மனுதாக்கல் வழி முறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள், 2015ன் விதி 6ல் நிர்ணயிக்கப்பட்டவாறு உரிய படிவத்திலும் நீதி மன்ற வில்லைக் கட்டணத்துடனும் மனுதாக்கல் செய்யுமாறு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது. மனுதாரர் விதிகளின்படி நாளதுவரை மனுதாக்கல் செய்யவில்லை.

இருப்பினும், 07.02.2017 அன்று இம்முறைமன்ற நடுவம் விசாரணைக்கு நேரில் ஆஜராகி தங்கள் தரப்பிலான விளக்கங்களை சமர்ப்பித்திட ஏதுவாக 21.12.2016 நாளிட்ட அழைப்பாணையும் அனுப்பி வைக்கப்பட்டது. மனுதாரர் ஆஜராக தவறிய போதும் 09.03.2017 அன்று மறுவிசாரணை நிர்ணயிக்கப்பட்டு கூடுதல் வாய்ப்பளித்து இம்முறைமன்ற நடுவ 27.01.2017 நாளிட்ட இரண்டாவது அழைப்பாணையின் வாயிலாக ஆணையிடப்பட்டது. மனுதாரர் போதிய வாய்ப்பளித்தும் ஆஜராகவில்லை.

இதனிடையே இம்முறைமன்ற நடுவம் 21.12.2016, 13.03.2017 மற்றும் 01.08.2017 நாளிட்ட அறிவிப்பாணைகளில் ஆணையிடப்பட்டவாறு திருமழிசை பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது அறிக்கை (ந.க.எண்.186/2017/அ1, நாள்: 10.08.2017), 11.08.2017 அன்று பெறப்பட்டது. மேற்படி அறிக்கையில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள வடிகால் மற்றும் சாலை பணிகள் குறித்து உரிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரிப் பெற்ற பின்னரே நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், ஆக்கிரமிப்பு என மனுதாரரும் அவரது கணவரும் ஆட்சேபனை தெரிவித்தபோது எவ்வித அடிப்படை ஆவணங்களும் காட்டப்படவில்லை என்றும் பணிகளை தடுத்து பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை தாக்கும் முயற்சியில் ஈடுபட்டதன் தொடர்ச்சியாகவே காவல் துறையில் புகார் தெரிவிக்கப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரரால், பூவிருந்தவல்லி மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில், தொடரப்பட்ட வழக்கில் (O.S.No.123/2014), நிலம் தொடர்பான விவரங்களை சரிபார்த்து வழக்கினை நடத்திட அட்வகேட் கமிஷ்னர் (திரு. ஏ. கார்த்திக், M.L.) நியமிக்கப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அட்வகேட் ஆணையர் அவர்கள் 09.01.2016 அன்று வருவாய் துறை அலுவலர்களுடன் புகாரில் கூறப்பட்ட நில அளவை எண்.41/1, மற்றும் 41/2, சரிபார்க்கப்பட்டு, மனுதாரரின் கோரிக்கை தொடர்பான உட்பிரிவு எண்.41/1B, 1C, 2B குறித்து தணிக்கை செய்யப்பட்டு, வருவாய் ஆவணங்களின் அடிப்படையில், மனுதாரரது இடம் 013 ச.மீ, அதாவது 140 ச.அ. மட்டும் பேரூராட்சியின் கால்வாய்க்கும் மனுதாரரது சுற்றுச் சுவருக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ளதென தெரிவிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக அட்வகேட் ஆணையர் அவர்கள் முன்னிலையில் அளவீடுகள் செய்யப்பட்டு, மேற்படி 140 ச.அ. ஆக்கிரமிப்பு தவிர்க்கப்பட்டு கால்வாய் அளவீடுகள் மாற்றியமைக்கப்பட்டு

மனுதாரரது இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதுமின்றி பணிகள் முடிக்கப்பட்டன என செயல் அலுவலரது அறிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், மனுதாரர் 2001–2006 காலத்தில் பேரூராட்சியின் 5–வது வார்டு உறுப்பினராக பதவி வகித்து வந்தாரெனவும், அந்நாளில் இவரது வீட்டிற்கு முன் பகுதிகள் யாவும் ஒரே சீராக இருக்க வேண்டி ஆக்கிரமிக்கப்பட்டதாக பின்னர் தெரிவிக்கப்பட்ட 140 சதுர அடிகளை பயன்படுத்தி ஒரே நேர்கோட்டில் சாலை கால்வாய் அமைக்க பேரூராட்சியால் கையகப்படுத்திக் கொள்ள மனுதாரரே தெரிவித்தாரெனவும் இதனை மனுதாரரே மேற்படி நீதிமன்ற வழக்கின் முறையீடு பத்தி எண்.3ல் மனுதாரர் குறிப்பிட்டுள்ளாரெனவும் செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2006க்குப் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மேல் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக 19.7.14ல் இம்முறையீட்டினை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு மனுதாரர் அனுப்பியுள்ளரெனவும் செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்வகேட் கமிஷ்னர் அவர்களது ஆய்வு மற்றும் அறிக்கையின்படி உரிய மாற்றங்கள் செய்யப்பட்டு புகாரில் குறிப்பிட்டது போல் எவ்வித ஆக்கிரமிப்பும் இன்றி பேரூராட்சிக்கு சொந்தமான பகுதியிலேயே சாலை மற்றும் கால்வாய் பொது மக்களுக்காக அமைக்கப்பட்டதெனவும், ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என்பதால் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து ஆணையிடுமாறு செயல் அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், மேற்படி நீதிமன்ற வழக்கு தொடர்பான ஆவண நகல்கள் மற்றும் பணிகள் முடிவுற்றமைக்கான புகைப்பட ஆதாரங்களையும் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி அறிக்கை மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மேலும், செயல் அலுவலரது நேரடி வாக்குமூலங்களை பதிவு செய்திடும் பொருட்டு, 06.12.17 அன்று ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 27.09.17 நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது. அதன்படி, திருமழிசை பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு. கி. இரவி அவர்கள் 06.12.2017ல் இம்முறைமன்ற நடுவத்தின் முன் ஆஜராகி தனது நேரடி வாக்குமூலத்தினையும் பதிவு செய்தார். மேற்படி வாக்குமூலத்தில் மேற்குறிப்பிட்ட 10.08.17 நாளிட்ட தனது அறிக்கையில் சமர்ப்பித்துள்ள விளக்கங்களை மீள சமர்ப்பித்து, நீதிமன்றத்தால் அட்வகேட் கமிஷனர் நியமிக்கப்பட்டவுடன், பேரூராட்சியால் வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதால் பணி நிறுத்தப்பட்டது என தெரிவித்தார். மேலும் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அட்வகேட் கமிஷன் அறிக்கையின்படி எந்தவித ஆக்கிரமிப்பும் இன்றி மழைநீர் வடிகால் கால்வாய் மற்றும் சாலை பணி செய்து முடிக்கப்பட்டுள்ளதையும், மேற்படி நீதிமன்ற வழக்கு நிலுவையில் இல்லை என்பதையும் தெரிவித்துள்ளார். மேலும், மனுதாரரது கணவர் திரு. மூர்த்தி என்ற இணை மனுதாரர் இயற்கை எய்திவிட்டாரெனவும் குறிப்பிட்டதுடன், புகாரில் குறிப்பிட்ட பணிகள் முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிலுள்ளதையும் தெரிவித்து புகைப்படங்களையும் தாக்கல் செய்து, மனுதாரரது புகாரை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் மனுதாரருக்கு போதுமான வாய்ப்புகள் அளிக்கப்பட்டும் அஜராகாத நிலையில் அல்லது கருத்துரைக்காத நிலையில் அவர் தரப்பில் தற்போது கூறிக்கொள்ள முகாந்திரம் ஏதுமில்லை என கருதப்பட்டு அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

செயல் அலுவலரது அறிக்கை, வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் உரிய பரிசீலனைக்குப்பின் ஏற்கப்பட்டு, மனுதாரரது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவம் தள்ளுபடி செய்து ஆணையிடுகிறது.

2017-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

**பெறுநர்**

1. திருமதி. மூ. சுகுணா,
   க/பெ. மூர்த்தி (லேட்)
   5, எட்டியத்தம்மன் கோயில் தெரு,
   குண்டுமேடு, திருமழிசை, சென்னை –124.

2. செயல் அலுவலர்,
   திருமழிசை பேரூராட்சி,
   திருமழிசை, சென்னை –124.

நகல்

பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை – 600 108.